**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 8/2024**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய **கார்த்திகேயன் PW.1** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 07.11.2024

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திகேயன் PW–1 | | |
| Father Name | : திருநாவுக்கரசு | Court | : |
| Village | : நாராயணநாயக்கன் சாவடி | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 46 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

18.06.2023 தேதியிட்ட தருமபுர ஆதீனத்திற்கு வாதி வழங்கிய குத்தகை ஒப்பந்தம் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.11.2023 தேதியிட்ட தருமபுர ஆதீனத்தால் வாதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.06.2023 தேதியில் தருமபுர ஆதீனத்தால் வாதிக்கு வழங்கப்பட்ட ரசீதின் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்டது) நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.